**செய்தி வெளியீடு எண் : 1272** **நாள் : 27.07.2022**

**செய்தி வெளியீடு**

**44–வது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி நாளை தொடங்கவுள்ளதையொட்டி போட்டி நடைபெறும் மாமல்லபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு இந்திய சதுரங்க விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.7.2022) 44–வது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி நாளை தொடங்கவுள்ளதையொட்டி போட்டி நடைபெறும் மாமல்லபுரத்திற்கு சென்று அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

44–வது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டி சரித்திர புகழ் வாய்ந்த மாமல்லபுரத்தில் 28.7.2022 முதல் 10.8.2022 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சர்வதேச அளவில் 186 நாடுகளைச் சேர்ந்த 2000–க்கும் மேற்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.6.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டட வளாகத்தில், 44–வது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தை அறிமுகப்படுத்தினார். மேலும், சர்வதேச அளவில் நடைபெறவுள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்திடும் வகையில், 1.7.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில் செஸ் ஒலிம்பியாட் இலச்சினை மற்றும் சின்னத்துடன் "நம்ம செஸ், நம்ம பெருமை" – "இது நம்ம சென்னை, நம்ம செஸ்" – "வணக்கம் செஸ், வணக்கம் தமிழ்நாடு" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட 15 பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், மாமல்லபுரம், பூஞ்சேரி கிராமத்தில், போர்பாயிண்ட்ஸ் ஷெரட்டன் நட்சத்திர விடுதி வளாகத்தில், செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக 12.7.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இன்று (27.7.2022) காலை சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நாளை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள 44–வது செஸ் ஒலிம்பியாட் – 2022 போட்டிக்கான தொடக்க விழா முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று மாலை, 44–வது செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறும் மாமல்லபுரம், பூஞ்சேரி கிராமத்தில், போர்பாயிண்ட்ஸ் விடுதி வளாகத்தில் சதுரங்க விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நவீன உள் விளையாட்டரங்கம், வாகனங்கள் நிறுத்துமிடம், சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புப் பணிகள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விளையாட்டு வீரர்கள் தங்குவதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் செயல்படும் காவல் கட்டுப்பாட்டு அறை, தமிழ்நாடு சுற்றுலா துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கு உள்ளிட்ட பல்வேறு கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். அத்துடன் விளையாட்டுப் போட்டிகளை காண வரும் பார்வையாளர்கள் கண்டு களிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளையும் நடத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மாமல்லபுரத்தில் இந்திய சதுரங்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. மா. மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு.எஸ்.எஸ். பாலாஜி, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச்

செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., செஸ் ஒலிம்பியாட் சிறப்பு அலுவலர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர், சர்வதேச சதுரங்க விளையாட்டு சாம்பியன் திரு. விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in